**அக்டோபர்: 31**

## இக்கட்டான சூழ்நிலையில் ஆதி திருச்சபையின் ஜெபம்.

**வாசிக்க: அப்போஸ்தலர் 4:24-31**

பிரதான ஆசாரியரும், அவரோடு மதத்தலைவர்களும் சேர்ந்து சுவிசேஷத்திற்கு விரோதமாக கூட்டங்கூடினர். அப்போஸ்தலர் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு; கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர். புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும், கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே. அந்தப்படி உம்முடைய முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள். இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள். அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.





பொந்தியு பிலாத்து நம் ஆண்டவரை பாராத்து இவர்கள் சொல்வது போல நீ இந்த யூதர்களின் இராஜாவா என கேட்டபோது, நம் ஆண்டவர் தெளிவாக ஒரு பதில் சொன்னார். "என்னுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்திற்குரியது அல்ல." இதையே தம் சீஷர்களுக்கும் அவர் போதித்து சென்றபடியாலே நாம் என்றைக்குமே இவ்வுலக அதிகார வர்க்கத்திற்கு போட்டியாளராகளல்ல. அதே சமயத்தில் உலக அதிகாரத்தில் அமர்வது தவறு என ஆண்டவர் சொல்லவில்லை. இவைகளிலிருந்து என்ன சொல்ல வருகிறார். நாம் உலகத்திலிருந்தாலும், ஆவிக்குரிய காரியங்களில் உன்னத ஆளுகைக்கே கட்டுபட்டிருக்க கடமை பட்டிருக்கிறோம். எனவே இவ்வுலக அதிகாரம் சுவிசேஷத்திற்கு எதிராக கொண்டு வரும் சட்டதிட்டங்களுக்கும் நாங்கள் உட்படாடவராகளல்ல என்பதை தெரிந்து செயல்படவேண்டும். அவர்கள் நம்மை மிரட்டினால் ஆதி சபை என்ன செய்ய வேண்டும் என நமக்கு இங்கே காண்பித்துள்ளது. அப்படி நான் ஜெபிக்கும் போது, கர்த்தர் நம் விசுவாசத்தை பலப்படுத்தி நிலை நிறுத்துவார். உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம். விசுவாசம் மலைகளை அகலச்செய்யும்; பயமோ மலையை தடையாக கொண்டு வந்து நிறுத்தும். உங்களுக்குள் என்ன இருக்கிறது? விசுவாசமா? பயமா?

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். 1 யோவான் 5:4

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, நாங்கள் எப்போதும் உங்க சித்தத்தை உங்க வழியிலே, உங்க பெலத்தில் செய்ய உங்க பிரஸன்னத்திலே நிரப்பும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

என் ஜெபங்களைக் கேளுங்கப்பா



ColoringPageSpot.com